Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 2, January 2023 E-ISSN: 2583-0481

# Laws of the Tamil

**Dr K. Geetha**, Assistant Professor of Tamil, Nehru Memorial College, Trichy.
ORCiD: https://orcid.org/0000-0002-4995-9314
DOI: 10.5281/zenodo.7583787

## Abstract

*As society and government are related to the life of the people, the Sangam literature clearly expresses the connection between them. During the Sangam period, there was the monarchy of Moovendars. Sangam hymns point to the rituals that supported the king in the monarchy. Sangam literature has been conveying to the world the various excellences and glories of the classical Tamils. Among them, the legal norms and justice systems of the Tamils are explained in detail in Sangam Literature. The king has the authority to regulate the rights and duties of the citizens and it was the law that defines how the people should behave and what the punishment will be in case of violation. If the people of the world accept and follow the high standards of the ancient Tamil people who have followed in their lives, the present state of the law will become stronger. The article studies the laws practised by the Tamil people.*

**Keywords:** Law, System, Tamils Sangam Literature, *Thirukkural*.

## References

[1] Manikkavasakar. *Thiruvasagam* (Text). Uma Publishing House, Chennai, 1998.
[2] Chidambaranar, Sami. Ettuththogaiyum and Tamilar Panbadum, Literary Institute, Chennai.
[3] Nagarasan, V. Dr. *Patuppattu*. New Century Book House (Pvt), Chennai, 2004.
[4] Dr. M. Muthuvelu. *Ilakkiyathil Satta Nerigal*. Jupiter Offset Printer, Chennai - 94.
[5] M. Varadarasanar. *Tirukkural* (Text). Pari Station, Chennai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# தமிழரின் சட்டநெறிகள்

**முனைவர் கி.கீதா,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, நேரு நினைவுக் கல்லூரி, திருச்சி.

**ORCiD: https://orcid.org/0000-0002-4995-9314**

**DOI: 10.5281/zenodo.7583787**

**ஆய்வுச்சாரம்**

*மக்கள் வாழ்வோடு அவர்தம் சமுதாயமும் அரசு முறையும் தொடர்புடையவை என்பதால், சங்க இலக்கியங்கள் அவற்றையும் வெளிப்படுத்துகின்றன. சங்க காலத்தில் முடியுடை மூவேந்தரின் முடியாட்சி நடைபெற்றது. அம்முடியாட்சி முறையில் மன்னர்க்கு துணை நின்ற முறைநெறிகளைப் பற்றி சங்கப் பாடல்கள் சுட்டிக் காட்டுகின்றன. சங்க இலக்கியங்கள் தமிழரின் பல்வேறு சிறப்புக்களையும், பெருமைகளையும் உலகிற்கு உணர்த்தி வருகின்றன. அவற்றுள் தமிழரின் சட்ட நெறிகளையும், நீதி அமைப்பு முறைகளையும் செம்மையாக எடுத்துக் கூறுகின்றன. குடிகளின் உரிமைகளையும், கடமைகளையும் ஒழுங்கு செய்யும் அதிகாரமுடைய அரசன் மக்கள் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும், மீறி நடந்தால் இன்ன தண்டனை உண்டென்றும் வரையறை செய்வது சட்டமாகும். வழிவழி வந்த பெரியோர்கள் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றிப் பேணிய உயர்ந்த நெறிகளை உலகத்தார் ஏற்று பின்பற்றுவர் எனின், சட்டம் வலிமை பெறுகின்றது.*

**திறவுச் சொற்கள்:** சட்டம், அறம், சங்க இலக்கியம், செப்பம், அறமும் நீதியும், திருக்குறள்.

**முன்னுரை**

முடியாட்சி முறை நிலவி வந்த சங்க காலத்தில், ஆட்சிமுறை அமைப்பின் உறுப்புகளாகக் கருதப்படும் சட்டமியற்றல், நிர்வகித்தல், நீதி வழங்குதல் என்னும் மூன்றிற்கும் மன்னனே தலைவனாக அமைந்திருந்தான். மன்னனின் விருப்பங்களே நாட்டின் ஆணைகளாக உருப்பெற்றன. மன்னனின் ஆணைகளே அன்றைய நாளில் வலிமைமிகு சட்டங்களாகக் கொள்ளப்பட்டன. நாட்டின் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநிறுத்துவதற்குத் தேவையெழும் நேரங்களில் மன்னன் ஆணைகளைப் பிரப்பித்து வந்தான். மக்களின் உடலில் உயிர் தங்குவதற்கு உணவும் நீரும் தேவை எனின், அந்த உயிருக்கும் உயிராக இருந்து காத்து வருபவன் மன்னன் என்ற நம்பிக்கை வேரூன்றி இருந்தது

**நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (புறம் -186)**

**அரசரும் அறநெறியும்**

மக்கள் மன்னனை உயிரெனக் கருதினர். ஆனால் மன்னனோ அறத்தையே உயிரெனக் கொண்டிருந்தான். மன்னன் யானை, குதிரை, தேர், மறவர் என நால்வகைப் படைகளைப்

பெற்றிருக்கலாம். அதனால் அவன் போர்த்திறன் மிக்கவனாகவும் வலிமை பொருந்தியவனாகவும் திகழலாம். ஆனால் அறநெறி நின்று, முறைநெறி போற்றி நல்லாட்சி செய்வதில்தான் தனக்குத் தனிச்சிறப்பு உண்டாகும் என்று அம்மன்னன் எண்ணினான்.

**கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்**
**நெடுங்கொடிய நிமிர்தேர் நெஞ்சுடைய புகல் மறவருமென**
**நான்குடன் மாண்டதாயினும் மாண்ட**
**அறநெறி முதற்றே அரசின் கொற்றம் (புறம் – 55)**

என்னும் புறநானூற்றுப் பாடல் அரச நெறிக்கு அறநெறியே அடித்தளமாக அமைய வேண்டும் என்ற உயர்ந்த கருத்தைக் குறிப்பிடுகின்றது.

அறநெறியில் நிற்காத வேந்தனின் நாட்டில் இருள் சூழும். இன்னல் பெருகும் என்னும் கருத்தைக் கலித்தொகையின் பாடல் அடிகள் எடுத்துக் காட்டுகின்றது.

**நல்அறநெறி நிறீஇ உலகாண்ட அரசன்பின்**
**அல்லது மலைந்திருந்து அறநெறி நிறுக்கலா**
**மெல்லியான் பருவம்போல், மயங்குஇருள் தலைவர் (கலித்தொகை)**

என்னும் இவ்வடிகள் ஒளிநீங்கி இருள் சூழ்ந்த உலக நிகழ்ச்சிக்கு உவமை கூறுகின்றன. அதற்கு ஏற்ற உவமையாக அறநெறியில் நிற்கும் அரசன் ஆட்சியில் ஒளியும் மகிழ்ச்சியும் பெருகுவது போல, ஒளி திகழும் பகல் இருந்தது அல்லது புரிவோன் ஆட்சியில் இன்னல் பெருகும், இடுக்கண் சூழும் என்பது போல் இருள் வந்தது என்னும் கருத்தை விளக்குகின்றன.

**நீதி வழங்குதலும் முறைமையும்**

சங்கப் பாடலில் ‘முறைமை’ என்னும் சொல், ‘முறை செய்தல்’, ‘நீதி வழங்குதல்’ என்ற பொருள்களில் வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், இச்சொல் தொல்காப்பியத்தில்,

**அன்னை என்னை என்றலும், உறவே**
**தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்**
**தோன்றா மரபின் என்மனார் புலவர் (தொல்காப்பியம்)**

என்னும் நூற்பாவில், ‘வழக்கு’ அல்லது ‘வழக்காறு’ நெறிமுறை என்ற பொருள்களில் ஆளப்பட்டுள்ளது. **முறைமை நின் புகழும் ஒன்றே மறம்பிக்கு (புறநானூறு)** என வரும் புறநானூற்றுப் பாடலில், ‘முறைமை’ என்பதற்கு ‘முறை செய்தல்’ என்பன பொருள்களாக அமைந்துள்ளன. முறை செய்தல் என்பதற்கான சட்டக் கலைச் சொல்லாகவே வழங்கியதை இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன. ‘முறை செய்தல்’ என்பது நீதி வழங்குதல் எனின், அந்த நீதி எவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்பதையும் தமிழ் இலக்கியங்கள் விளக்குகின்றன. இறைமாட்சி குறித்துப் பேசும் திருக்குறள் இதனை விளக்குகின்றது.

**ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்துசெய்வது அஃதே முறை (குறள்-541)**

என்னும் குறளுக்குப் பரிமேலழகர், "தன் கீழ் வாழ்பவன் குற்றம் செய்தால், அக்குற்றத்தை நாடி, யாவர் மட்டும் கண்ணோடாது நடுவுநிலைமையுடன் அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து அந்நூலின்கண் உரைத்தவாறு செய்வதே முறையாகும்". என்று முறைமைக்கான இலக்கணத்தை விளக்குகின்றார். அடுத்த நிலையில் நீதி வழங்குவதற்கு ஏற்ற வகையில் துணை நிற்கும் அறநூல்களின் வழிகாட்டுதல்களை நாடவேண்டும், நூலாய்ந்த அமைச்சரோடும் ஆய்ந்தறிதல் வேண்டும். இதனை இறைபுரிதல் எனலாம். அந்த வழக்கினைத் தீர்வு செய்வதற்கான முடிவை ஆராய்ந்து தெளிதல், தேர்ந்து நிற்றல் எனப்படும். இவ்வாறு எடுக்கப்பட்ட முடிவைத் தீர்ப்பாக அறிவித்தல் என்பது தான் முறைசெய்தல் என்று அமைவதாகக் கொள்ளலாம். எனவே 'முறைமை' என்பதற்கு வள்ளுவர் வகுத்தளித்த இலக்கணம், நீதி வழங்குதலில் ஈடுபடும் மன்னன் எந்தெந்த முறைகளைப் பின்பற்றி நிற்க வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்குகிறது. இது சட்ட நுட்பத்தோடு அமைந்துள்ளது.

**முறை செய்தல்**

முறைசெய்ய முற்படும் ஒருவர் எவரிடத்தும் கண்ணோட்டம் செலுத்துதல் கூடாது என்பதைக் கலித்தொகைப் பாடலொன்றும் குறிப்பிடுகின்றது. இந்தப் பாடல்வரி முறை செய்யும்போது தீயவரின் உயிரை நீக்க வேண்டிய நிலை வந்தாலும் அதனைச் செய்து முடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. **முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல்" (கலித்-133)** என்னும் நல்லந்துவனாரின் பாடல், தீங்கு செய்தோரைத் தண்டிக்கும் இடத்துக் கண்ணோட்டம் கூடாது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. சங்க காலத்தில் வரையறுக்கப்பட்ட சட்டங்கள் இயற்றப்பட்டதாக தெரியவில்லை. இருப்பினும் சட்டம், நீதி இவற்றைப் பேணுவதில் சங்க இலக்கிய வேந்தர் கருத்துடன் இருந்தனர். எனினும், அறநூல்களின் கருத்துக்களே அம்மன்னர்களுக்கு நீதி வழங்கிட வழிகாட்டி நெறிகளாக விளங்கின என்பதில் ஐயமில்லை.

**சட்டமும் அறமும்**

சங்கத் தமிழ் இலக்கியங்கள் சட்டம் என்னும் சொல் வழங்கப் பெறவில்லை. ஆனால் சட்டம் என்ற சொல் இன்றைய நாளில் எந்தெந்த கருத்துக்களை உள்ளீடாகக் கொண்டுள்ளதோ, அந்தக் கருத்துக்களைக் குறிக்கும் வகையில் 'அறம்' என்ற சங்கச் சொல் இலக்கியங்களில் இடம் பெற்றிருந்தது என்பதனை,

**ஆன்முலை அறுத்த அறல் இல்லோர்க்கும்**
**மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
**குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்**
**வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென**
**நிலம்புடை பெயர்வது ஆயினும் ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென**
**அறம்பா டிற்றே ஆயிழை கணவ (புறம் - 34)**

என்னும் புறப்பாடலில் வரும் அறம் என்னும் சொல் உறுதி செய்கின்றது. இங்கு அறம் என்பது சட்டக் கருத்துக்களின் தொகுப்பு நூல் ஒன்றினைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

சட்டம் என்பதை வரையறை செய்வதற்கு முனைந்த மேனாட்டு அறிஞர்கள் பலர்,

- ‘சட்டம்’ என்பது அரசின் ஆணை என்றும்,
- நீதியின் கருவி சட்டம் என்றும்,
- அறநெறியை அடிப்படையாகக் கொண்டு, அரசின் ஆணையாக நின்று, நீதியை நிறுவுவதற்குப் பயன்படும் கருவி என்று அமையும்.

இந்நிலையில், சங்கத் தமிழர் ‘சட்டம்’ என்னும் இன்றைய சொல்லிற்கு இணையாக ‘அறம்’ என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருப்பதன் பொருத்தத்தைக் கண்டு வியப்பெழுகின்றது.

**அறத்தாறும் வழக்காறும்**

சான்றோர்கள், வழக்காற்று நெறிகளைக் குறிப்பதற்கும் ‘அறம்’ என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இச்சொல் ‘வழக்காறு’, ‘வழக்கியலாணை’ என்னும் பொருள்களிலும் ஆளப்பட்டுள்ளது. இதற்குப் பின்வரும் இலக்கிய அடிகள் சான்றுகளாக அமைகின்றன.

**அறநெறி இதுவெனத் தெளிந்த (ஐங்குறுநூறு. 371)**

**அறனிழுக்காது அல்லவை நீக்கி மறனிழுக்கா**
**மானம் உடையது அரசு (திருக்குறள் - 5)**

எனவரும் அடிகளில் குறிப்பிடப்படும். ‘அறநெறி, அறத்தாறு, அறம்’ என்னும் சொற்கள் சான்றோரால் தொய்வின்றி தொடர்ந்து போற்றப்படும் நன்னெறிகளைச் சுட்டுகின்றன. இவ்வாறு ‘அறம்’ என்ற சொல்லால் உணர்த்தப்படும் வழக்காறு என்பது ‘வழங்கியல் ஆணை’ என்பதும், எழுதப்படாத சட்டங்கள் அமைந்தவை என்பதில் ஐயமில்லை.

வழிவழி வந்த பெரியோர்கள் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றிப் பேணிய உயர்ந்த நெறிகளை உலகத்தார் ஏற்று பின்பற்றுவர் எனின், சட்டம் வலிமை பெறுகின்றது. அது வழக்காறாக அல்லது வழக்கியலாணையாக மாறும் என்பதற்கு மதுரைக்காஞ்சி சான்று பகர்கின்றது. இவ்வாறு அறநெறியின் வழியே பாண்டிய மன்னன் நாட்டை ஆண்டு வந்தான் என்பதை,

**அரசியல் பிழையாது அறநெறி காட்டி,**
**பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது (மதுரைக் காஞ்சி – 192 - 2)**

என்னும் அடிகளில் பெரியோர் சென்ற வழி என்பது எழுதப்படாத சட்டம் என்பதன் பொருளை உணர்த்துகின்றது. வழக்கு என்னும் சொல்லும் உயர்ந்தோர் வலியுறுத்தும் ‘அறநெறி’ என்னும் பொருளில் வழங்கியுள்ளது. இதற்குத் தொல்காப்பியம்,

**வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர்கட்கு ஆகலான் (தொல்- 1594)**

சான்றாக அமைகின்றது. எனவே வழக்கு என்பதும் எழுதப்படாத சட்டங்களின் பகுதியாக அமைந்திருந்தது என்று தெளியலாம்.

**இலக்கியங்களில் சட்டம் என்பதன் பொருள்கள்**

சைவ திருமுறைகளில் ஒன்றான திருவாசகத்தில் ‘சட்டம்’ என்னும் சொல் ‘விதிமுறை’ என்னும் பொருள் உணர்த்தியமைக்குச் சான்று உள்ளது. இதனை,

**பிட்டுநேர்பட மண் சுமந்தே**
**பெருந்துறைப் பெரும் பித்தனே**
**சட்ட நேர்பட வந்திலாத**
**சழக்கனேன் உனை சார்ந்திலேன் (திருவாசகம்)**

என்னும் திருவாசக அடிகளுக்கு உரை வகுத்த மகாவித்துவான் ச.தண்டபானி தேசிகர், சட்டம் என்னும் சொல் ‘விதி’ என்னும் பொருளை குறித்துள்ள மரபை எடுத்துக் காட்டுகின்றார்.

விநாயகர் புராணத்தில், சட்டம் என்பது ‘செப்பம்’ என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளதைக் காணலாம். சட்ட மாதவன்- என்பது பாடல். இச்செப்பம் என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் பல இடங்களிலும் பயின்று வந்துள்ளது. சிறுபாணாற்றுப்படையில், **கைபுனை செப்பம் கடைந்த மார்பில் (53)** என்று வருகிறது. மலைபடுகடாமில் இச்சொல் செம்மை என்னும் பொருளை உணர்த்துகிறது.

**கன்றுஎரி ஒள்இணர் கரும்பொடு மலைந்து**
**சேந்த செயலைச் செப்பம் போகி (மலைபடுகடாம் -166)**

என்று அமைகிறது. குறுந்தொகையில் ‘முழுமை’ என்னும் பொருளில் இடம் பெற்றுள்ளது.

இவ்விலக்கியங்களில் ‘செப்பம்’ என்னும் சொல் செம்மை, முழுமை, திருத்திய வடிவம் என்னும் பொருள்களில் பயன்பட்டு வந்துள்ளது. எனினும், செப்பம் என்னும் சொல் உணர்த்திய பொருள்களை ஆராயுமிடத்து இன்றைய காலக்கட்டத்தில் சட்டம் சொல்லுக்குரிய பொருளை உணர்த்தியதன் காரணத்தையும் அறிய முடிகிறது.

**நிறைவாக**

சங்க காலத்தில் மூவேந்தர்கள் முடியாட்சி முறைவழி தமிழகத்தை ஆண்டு வந்தனர். மக்கள், மன்னனே மலர் தலை உலகத்தின் அனைத்து இயக்கங்களுக்கும் அடிப்படை என்று நம்பினர். அரசர்களும் முறைசெய்வதில் கருத்தாக இருந்தனர். இலக்கியங்கள் முறைமை என்னும் சொல் நீதி வழங்குவதைக் குறித்ததை எடுத்துக்காட்டுகின்றன. அறம் என்னும் சொல் இன்று சட்டம் என்னும் சொல் உணர்த்தும் பொருளில் ஆளப்பட்டு வந்துள்ளது. இந்த அறம் என்ற சொல்லே நீதிமுறை என்ற பொருளையும் குறித்து வந்தது. எழுதப்பட்ட சட்டங்களாக அறநூல்களும், எழுதப்படாத சட்டங்களாக அறநெறிகளும் வழக்காறுகளும் இருந்தன. ‘சட்டம்’ என்னும் சொல் சங்க இலக்கியங்களில் வழங்கப்பட வில்லை என்றாலும் காலவோட்டத்தில், திட்டம், நடுவுநிலைமை, செப்பம் என்று பல்வேறு பொருள்களைக் குறித்துப் பல நிலைகளைத் தாண்டி, இன்று வழக்கிலுள்ள பொருள்களுக்கு ஆகி வந்துள்ளது. சங்கத் தமிழர் ‘சட்டம்’

என்னும் இன்றைய சொல்லிற்கு இணையாக ‘அறம்’ என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருப்பதன் பொருத்தத்தைக் கண்டு வியப்பெழுகின்றது.

**துணை நூற்பட்டியல்**

[1] மாணிக்கவாசகர். *திருவாசகம்.* உமா பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு,1998,

[2] சிதம்பரனார், சாமி. *எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்*, இலக்கிய நிலையம், சென்னை. முதற் பதிப்பு, 1990.

[3] நாகராசன், வி. *பத்துப்பாட்டு*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, மு.ப. 2004.

[4] முத்துவேலு, மு. *இலக்கியத்தில் சட்ட நெறிகள்*, ஜீபிடர் ஆப்செட் பிரிண்டர், சென்னை. முதற் பதிப்பு, 2000.

[5] வரதராசனார் மு. *திருக்குறள் உரை*, பாரி நிலையம், சென்னை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.